## அல்லாஹ்வின் கட்டளை

مَنۡ یَّہۡدِ اللّٰہُ

فَہُوَ الۡمُہۡتَدِیۡ ۚ

وَمَنۡ یُّضۡلِلۡ

فَاُولٰٓئِکَ ہُمُ الۡخٰسِرُوۡنَ ○

**பொருள் :**

அல்லாஹ் வழிகாட்டியவனே நேர்வழி பெற்றவன். எவர்களை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ, அவர்களே இழப்பிற்குரியோர் ஆவர். (அல்அஃராஃப்:166)

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 45

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுஸ்ஸானீ 14 ★ நுபுவ்வத் 10 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 10 நவம்பர் 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இந்த ஜமாஅத்தில் நாடுகளும் இணையும். பின்னர் அவற்றுடன் ஓர் உலகம் இந்தப் பக்கம் கவனம் செலுத்தும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஜமாஅத்தின் எதிர்காலம் குறித்து ஓர் ஆன்மீக காட்சி

மிகவும் தெளிவான ஆன்மீக காட்சியிலிருந்து இந்த விஷயம் எனக்கு தெரிய வந்துள்ளது. அதாவது நாடுகளும் இந்த ஜமாஅத்தில் இணையும். எந்த அளவுக்கு என்றால், அந்த நாடுகளும் எனக்கு (ஆன்மீக காட்சியில்) காட்டப்பட்டன. அவர்கள் குதிரைகளில் சவாரி செய்திருந்தனர்.

மேலும், நான் உமக்கு எதுவரை பரக்கத் வழங்குவேன் என்றால் அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவர் என்றும் அல்லாஹ் (என்னிடம்) கூறியுள்ளான்.

அல்லாஹ் ஒரு காலத்திற்கு பிறகு, நமது ஜமாஅத்தில் அப்படிபட்ட மக்களை இணைத்துவிடுவான். மேலும், பின்னர் அவர்களுடன் ஓர் உலகம் கவனம் செலுத்தும்.

நல்லடியார்களின் தோழமை குறித்து

قَدۡ اَفۡلَحَ مَنۡ زَکّٰىہَا (அஷ்ஷம்ஸ்:10) என்று திருக்குர்ஆனில் வந்துள்ளது. அதாவது தனது நஃப்ஸை தூய்மைபடுத்தியவர் வெற்றி பெற்றுவிட்டார். நஃப்ஸை தூய்மைபடுத்துவதற்கு நல்லடியார்களின் தோழமையும், நல்லடியார்கள் மற்றும் நன்மக்களின் தொடர்பும் மிகவும் பயனுள்ளதாகும். பொய் போன்ற தீய குணங்களை அகற்ற வேண்டும். எவரின் வழியில் செல்கின்றாரோ அவரிடம் வழிப்பாதையை கேட்க வேண்டும். அத்துடன் தனது தவறுகளையும் சரி செய்து கொள்ள வேண்டும். தவறுகளை சரிசெய்யாத வரை வாக்கியங்கள் எப்படி சரியாகாதோ அதுபோன்று தவறுகளை நீக்காமல் ஒழுக்கங்களும் சரியாகாது. மனிதன் எப்படிபட்ட விலங்கினம் என்றால், நஃப்ஸை தூய்மைபடுத்திக் கொண்டு இருக்கும் வரை தான் அவன் நேர் வழியில் சென்று கொண்டிருப்பான். இல்லையென்றால் அவன் வழி தவறிவிடுவான்.

### இறையச்சம்

கூறினார்கள்: எல்லா பக்கமும் அமைதி நிலவும் இரவு நேரத்தில், மேலும் நாம் தனிமையில் இருக்கும்போது, இறைவன் தேவையற்றவன் ஆவான் என்று அவனது நினைவில் அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்...

## நபிமொழி

(2304) ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எங்களது ஆடுகள் ஸலஃ எனும் மலையில் மேயந்து வந்தன. அந்த ஆடுகளில் ஒன்று சாகும் தருவாயில் இருப்பதை எமது அடிமைப் பெண்களில் ஒருவர் பார்த்தார். மேலும், ஒரு கல்லை (கூர்மையாக) உடைத்து, அதன் மூலம் அந்த ஆட்டை அறுத்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இது பற்றி நான் கேட்கும் வரை சாப்பிடாதீர்கள்! என்றோ அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இது குறித்து நான் ஆளனுப்பிக் கேட்கும் வரை என்றோ ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) தமது குடும்பத்தாரிடம் கூறினார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அது குறித்து கேட்டார்கள் அல்லது ஒருவரை அனுப்பி கேட்டறிந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை உண்பதற்கு அனுமதி நல்கினார்கள்.

அவர் அடிமைப் பெண்ணாக இருந்து கொண்டு (இவ்வாறு ஆட்டை) அறுத்திருப்பதை நான் மிகவும் விரும்புகின்றேன் என்று ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரஹ்) கூறினார்கள்.

(புகாரி தொகுதி 4, பாடம் வகாலத், காதியான் பதிப்பு 2008)

**பிறர் புரிந்து கொள்ளும் வழிமுறையில் நீங்கள் உரையாடுங்கள். மேலும், பிறரது தவறான புரிதல் நீங்கும் வழிமுறையிலும் உரையாடுங்கள். எந்த நபர் விரைவாக கோபமுற்றும், உணர்ச்சிவசப்பட்டும் விடுகின்றாரோ அவரால் மற்றவர்களுக்கு ஒருபோதும் புரிய வைக்க முடியாது. எதிரிக்கு எதிராக பேசும்போது உண்மையை பேசுங்கள் மற்றவர்களுக்கு நேர்வழி காட்டிவிட்டு நீங்கள் சுயமே வழிதவறிவிடாதீர்கள்**

اُدۡعُ اِلٰی سَبِیۡلِ رَبِّکَ بِالۡحِکۡمَۃِ
وَالۡمَوۡعِظَۃِ الۡحَسَنَۃِ وَجَادِلۡہُمۡ بِالَّتِیۡ ہِیَ
اَحۡسَنُ ؕ اِنَّ رَبَّکَ ہُوَ اَعۡلَمُ بِمَنۡ ضَلَّ عَنۡ
سَبِیۡلِہٖ وَہُوَ اَعۡلَمُ بِالۡمُہۡتَدِیۡنَ ○

பொருள்: நீர் நளினமாகவும், அழகிய அறிவுரையைக் கொண்டும் உம் இறைவனின் வழியில் அழைப்பீராக! மேலும், அவர்களுடன் மிக அழகிய முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வீராக! அவனுடைய வழியிலிருந்து தவறியவர்களையும், நேரான வழியில் இருப்பவர்களையும் நிச்சயமாக உம்முடைய இறைவன் நன்கறிகின்றான். (அந் நஹ்ல்:126)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: நளினத்துடனும், அறிவை பயன்படுத்தியவாறும் உரையாடுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். ஏனெனில், எந்த நபர் அவ்வாறு செய்வதில்லையோ, இன்னும் கூறப்போனால் எவர் விரைவாக கோபமடைந்து உணர்ச்சிவசப்பட்டுவிடுகின்றாரோ அவரால் ஒருபோதும் பிறருக்கு எதனையும் புரிய வைக்க முடியாது.

நுபுவ்வத்தின் பொருளின் அடிப்படையில் அதன் விளக்கம் இவ்வாறு அமையும். அதாவது, இறை வேதத்தின் உதவியுடன் மக்களை மார்க்கத்தின் பக்கம் அழையுங்கள். திருக்குர்ஆன் வழங்கியுள்ள ஆதாரங்களையே எடுத்து வையுங்கள். உங்கள் புறமிருந்து வீணானவற்றை முன் வைக்காதீர்கள். அந்தோ! இந்த வழிமுறையை முஸ்லிம்கள் புரிந்திருந்தால்

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்...

## இந்த இதழில்


- திருக்குர்ஆன்
- நபிமொழி
- மல்ஃபூஸாத்
- தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை)
- குத்பா பேருரை — ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை ( 07 அக்டோபர் 2022 )
- குத்பா பேருரை — ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை ( 14 அக்டோபர் 2022 )


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அமெரிக்காவின் டேலாலஸில், மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் திறப்பு விழா சந்தர்ப்பத்தின்போது, முஸ்லிம் என்ற ரீதியில் தங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவது குறித்து ஜமாஅத் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள்**

**தற்போது நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாசல்களுக்கான அதிக தேவை உள்ளது. அவை இறை இல்லம் ஆகும். எந்த கிராமத்தில், நகரத்தில் நமது பள்ளிவாசல் நிறுவப்பட்டுவிட்டதோ ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். நிபந்தனை என்னவென்றால், பள்ளிவாசலை நிறுவுவதில் எண்ணம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அல்லாஹ்விற்காக அவை கட்டப்பட வேண்டும் - ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை)**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று இன்று நாம் இறைவனுடன் நன்றியுணர்வின் தரத்தை நிலை நாட்டவேண்டும். நாம் தூய்மை மற்றும் நன்றியுணர்வுடன் அல்லாஹ்வின் கட்டளைகளைபடி அமல் செய்ய வேண்டும். எல்லா பக்கமும் அன்பை நாம் பரப்ப வேண்டும். வெறுப்பை அகற்ற வேண்டும்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் Dallas, **டேக்ஸாஸ் அமெரிக்காவிலுள்ள பைத்துல் இக்ராம் பள்ளிவாசலில் 07 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **07ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝
قُلْ أَمَرَ رَبِّيْ بِالْقِسْطِ وَأَقِيْمُوْا
وُجُوْهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّادْعُوْهُ
مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ كَمَا بَدَأَكُمْ تَعُوْدُوْنَ ۝
فَرِيْقًا هَدٰى وَفَرِيْقًا حَقَّ عَلَيْهِمُ الضَّلٰلَةُ
إِنَّهُمُ اتَّخَذُوا الشَّيٰطِيْنَ أَوْلِيَآءَ مِنْ دُوْنِ
اللّٰهِ وَيَحْسَبُوْنَ أَنَّهُمْ مُّهْتَدُوْنَ ۝
يٰبَنِيْ آدَمَ خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ
وَّكُلُوْا وَاشْرَبُوْا وَلَا تُسْرِفُوْا إِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْرِفِيْنَ ۝

பொருள்: நீர் கூறுவீராக: என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைபிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும், நீங்கள் வணக்கத்தலம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும், மார்க்கத்தில் உங்களை அவனுக்காக் களகங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களைத் தோற்றுவித்தது போல், நீங்கள் (அவனிடமே) திரும்புவீர்கள்.

ஒரு பிரிவினர்க்கு அவன் நேர்வழியினை வழங்கினான். ஆனால், மற்றொரு பிரிவினர்க்கோ தவறான வழியில் செல்லுவது உரித்தாகி விட்டது. (ஏனென்றால்) அவர்கள் அல்லாஹ்வை விட்டுவிட்டு ஷய்த்தான்களைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டு,தாங்கள் நேர்வழியினைப் பெற்று விட்டோம் என்று நினைத்துக் கொள்கின்றனர்.

ஆதமின் மக்களே! ஒவ்வொரு வணக்கதலத்திடத்தும், நீங்கள் உங்கள் அழகை மேற்கொள்ளுங்கள். உண்ணுங்கள். பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால், அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல் அஃராஃப்:30-32)

இன்று அல்லாஹ் உங்களது பள்ளிவாசலை திறப்பதற்கு உங்களுக்கு நற்பேறு வழங்கிக் கொண்டிருக்கின்றான். இதன் கட்டுமானம் சில காலங்களுக்கு முன்பே முழுமையடைந்து-விட்டபோதிலும், அது இன்று முறையாக திறக்கப்படுகிறது. இங்கு தொடக்கத்தில் பள்ளிவாசலாக ஒரு ஹால் கட்டப்பட்டிருந்தது. ஆனால், தற்போது நீங்கள் முறையாக பள்ளிவாசல் கட்டியுள்ளீர்கள். எவ்வாறு இருப்பினும், தற்போது ஓர் அழகான மற்றும் நல்ல பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டது. இடத்தை பொருத்தவரையிலும் மிகவும் பெரிய இடமாக உள்ளது. இந்த பள்ளிவாசல் கட்டுமானத்தில் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையை நிறைவேற்றுவதற்குரிய நற்பேறை வழங்குவானாக.

அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக மட்டுமே இந்த பள்ளவாசலை கட்டியவர்களாக நீங்கள் இருக்க அல்லாஹ் வகை செய்வானாக. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலிலிருந்து பயன்பெறுபவர்களாக நீங்கள் திகழ்வீர்களாக. அந்த வழிகாட்டலில் அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எவர் பள்ளிவாசலைக் கட்டினாரோ, அவருக்கு சுவர்க்கத்தில் அதேபோன்ற வீட்டை அல்லாஹ் கட்டுவான். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் மஸாஜித், பாடம் -ஃபஸ்ல் பினாஃ அல் மஸ்ஜித், ஹதீஸ் எண்: 1189)

அல்லாஹ்வின் திருப்திக்காக கட்டப்பட்ட பள்ளிவாசலின் பணி என்பது பள்ளிவாசல் கட்டுமானத்துடன் முடிந்துவிடுவதில்லை. மாறாக, அல்லாஹ்வின் திருப்தி மனிதனுக்கு எப்போது கிடைக்கும் என்றால், அவனது கட்டளைகளின்படி செயல்படுபவனாக மனிதன் இருக்க வேண்டும். மேலும், இறை வணக்கத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடியவராக மனிதன் இருக்க வேண்டும். மேலும், நன்றியுணர்வுடனும், தூய்மையுடனும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும். மேலும், தமது பைஅத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

நாம் காலத்தின் இமாமையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரையும் ஒப்புக் கொண்டுள்ளோம். இது நமது நற்பேறாகும். எப்போதும் இதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொள்வதும், அன்னாரின் பைஅத்தின் கீழ் வருவதும் நம் மீது மாபெரும் பொறுப்பை சுமத்துகின்றது. அன்னாரின் பைஅத்தின் கீழ் வந்துவிடுவதுடன் நமது பணி முடிவடைந்துவிடவில்லை. மாறாக, முன்பை விட பொறுப்பு அதிகமாகிவிட்டது. அப்போதுதான், நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ள அருட்கொடைகளுக்கு நம்மால் வாரிசுகளாக முடியும். எனவே, தங்களது பொறுப்புகளை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பள்ளிவாசலை நிரப்புவது நமது பொறுப்பாகும். பரஸ்பரம் அன்பு மற்றும் நேசத்துடன் இருப்பது நமது

பொறுப்பாகும். நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவது நமது பொறுப்பாகும். இஸ்லாத்தின் அழகிய போதனையின் தூதுச் செய்தியை உலகிற்கு வழங்குவது நமது பொறுப்பாகும். தொடர் துஆக்களின் மூலம் தமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துவது நமது பொறுப்பாகும். நமது சந்ததிகளின் சீர்திருத்தத்தின் பக்கம் கவலை கொள்வது நமது பொறுப்பாகும். அப்போதுதான் பள்ளிவாசலுக்குரிய உரிமையை நம்மால் வழங்க முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

எங்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்த வேண்டுமோ அங்கு பள்ளிவாசலைக் கட்டுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 119, காதியான் பதிப்பு 1984)

தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டதால், இந்த பகுதியில் வெளிப்படையில் இஸ்லாத்தின் அறிமுகம் ஏற்பட்டுவிடும். இன்றைய நாட்களில் அதிகமான எண்ணிக்கையில் மக்களின் வருகை, நெரிசல் மற்றும் சப்தம் போன்றவை இருந்தாலும் கூட சில அண்டை வீட்டுக்காரர்களும் வந்துள்ளனர். மேலும், தமது நேர்மறையான எண்ணங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். சில நாட்களுக்கு முன்பு நமக்கு முற்றிலும் அருகில் வசிக்கும் ஒருவர் சந்திப்பதற்காக வந்திருந்தார். அப்போது அவரும் இதனையே கூறினார். அதாவது, எங்களுக்கு உங்களுடைய அருகாமை கிடைத்துவிட்டது என்று நாங்கள் மிக மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்று அவர் கூறினார்.

எவ்வாறு இருப்பினும் நமது அண்டை வீட்டுக்காரர்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தேவையற்ற சப்தம் மற்றும் அசாதாரண நிலைகளை நாம் இங்கு உருவாக்கக் கூடாது. சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்து கொண்டு நாம் அனைத்து பணிகளையும் செய்ய வேண்டும். ஆக, மஸ்ஜித் குறித்த அறிமுகம் அண்டை வீட்டுக்காரர்களுக்கும் ஏற்படும். இங்குள்ள சாலைகளை கடந்து செல்பவர்களுக்கும் ஏற்படும். அறிமுகத்திற்கான இந்த வழி திறந்துள்ளது. இதன் மூலம் உங்களுடைய தப்லீக்கிற்கான பாதைகளும் திறக்கும்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இஸ்லாமிய போதனைகளின் முன்னுதாரணமாக திகழ வேண்டும். இந்த உலகத்தில் வசித்துக் கொண்டு, உலகப் பணிகளை செய்தவாறு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடிய மக்கள் இந்த உலகிலும், சமூகத்திலும் உள்ளனர் என்று ஒரு தெளிவான வித்தியாசம் உலகத்திற்கு தென்பட வேண்டும். மேலும், வல்லமையும், ஆற்றலும் மிக்க தம்மை படைத்த இறைவனுடன் தொடர்பு வைத்துள்ள மக்களும் உள்ளனர். படைப்பினத்தின் மீது அனுதாபம் கொள்ளக்கூடிய மக்களும் உள்ளனர். படைப்பினங்களுக்கு பயன்படக்கூடியவர்களும் உள்ளனர் என்பதும் அவர்களுக்கு தென்பட வேண்டும்.

இந்த விஷயங்களை உலகவாதிகள் பார்க்கும்போது. அவர்களிடம் தேடுதல் உருவாகும். பின்னர், அதன் மூலம் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்கான பாதை திறக்கும். எனவே, தற்போது ஒவ்வொரு அஹ்மதியும் முன்பை விட அதிகமாக, இஸ்லாமிய போதனையையின் செயல் வடிவமாக மாறுவதற்கு அவசியம் உள்ளது.

நான் துவக்கத்தில் ஓதிய வசனங்களிலும் பள்ளிவாசல்களுடன் தொடர்புடையவர்களின் சில பொறுப்புகளின் பக்கம் அல்லாஹ் கவனமூட்டியுள்ளான்.

முதன் முதலில் அல்லாஹ் கூறியுள்ளான்:

நீதியை நிலைநாட்டுங்கள். மேலும், நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: எந்த ஒரு சமுதாயத்தின் மீதான பகைமையும் உங்களை நீதம் செய்வதிலிருந்து விலக்க வேண்டாம்.

தற்போது இந்த அளவிற்கு நீதியை நிலைநாட்டக் கூடிய தரத்தில் உள்ள ஒருவரால் மற்றவரைக் குறித்து தவறான எண்ணமே கொள்ள முடியாது. ஒருவருக்கு இழப்பை ஏற்படுத்தும் எண்ணத்திற்கான கேள்வியே எழு முடியாது. அதுபோன்ற நபர், நான் எவ்வாறு மற்றவருக்கு நன்மை பயப்பதற்கு எனது பங்களிப்பை வழங்க முடியும்? என்று சந்தர்ப்பத்தை தேடியவராக இருப்பார். அதுபோன்ற உரிமைகளை நிலைநாட்டக் கூடியவர் நிச்சயமாக சூழ்நிலையின் மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவார். பின்னர் இந்த நல்ல தாக்கமே தப்லீக்கின் பாதைகளையும் திறக்கின்றது. எனவே உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு, பள்ளிவாசலுக்கு வரக்கூடியவர்களுக்கு பள்ளிவாசல் தொடர்பாக அல்லாஹ் வழங்கும் முதல் அறிவுரை இதுவாகும். அதாவது, நீங்கள் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள். மேலும் அதற்கு மற்ற எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் நீதியை நிலைநாட்டுவது ஆகும். அல்லாஹ் அந்நியர்களுடனும், எதிரிகளுடனும் நீதியை நிலைநாட்டுவதற்கு கட்டளை வழங்கியிருக்கும்போது, நாம் நம்மவர்களுடன் எந்தஅளவிற்கு அன்புடனும், நேசத்துடனும் நடக்க வேண்டும்! இந்த நிலை இருக்கும்போது, பின்னர் அதுபோன்ற மக்கள் மீது அல்லாஹ்வின் அன்பின் பார்வையும் விழுகின்றது. இந்த மக்கள் பள்ளிவாசலில் அல்லாஹ்வை வணங்குவதற்காக நுழையும்போது அல்லாஹ் அவர்களின் இறை வணக்கங்களை ஒப்புக் கொள்கின்றான். ஆனால், ஒரு நபர் வீட்டில் தமது மனைவியுடன் நல்ல முறையில் நடக்கவில்லையென்றால், எல்லாநேரமும் ஏச்சுபேச்சுகளுக்கு இலக்காக்கி வருகின்றார் என்றால், பிள்ளைகள் அவரிடமிருந்து விலகி அச்சத்திற்குரியவர்களாக உள்ளனர் என்றால், பின்னர் அவர் தனது செயல்களால் பிள்ளைகள் மார்க்கத்திலிருந்து விலகுவதற்கு காரணியாகவும் ஆகிவிடுகின்றார். பின்னர், அதுபோன்ற நபர்களின் ஜமாஅத் பணிகளும், இறை வணக்கங்களும் அல்லாஹ்வின் சமூகத்தில் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு தகுதி வாய்ந்தவையாக இருப்பதில்லை. இந்த இரட்டை அமல்களின் காரணமாக மனிதன் வேறு யாரையும் ஏமாற்றவில்லை. மாறாக, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான்.

எனவே, எவர் உள்ளேயும், வெளியேயும் நீதியை நிலைநாட்டுபவராக இருக்கின்றாரோ, எவரின் சொல்லும், செயலும் உள்ளேயும், வெளியேயும் ஒன்றுபோல் இருக்கின்றதோ அவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். மேலும், இப்படிபட்ட மக்களே உண்மையில் பள்ளிவாசலை நிரப்புவதற்குரிய உரிமையை வழங்கக் கூடியவர்கள் ஆவர். ஏனெனில், அவர்களின் உள்ளம் அல்லாஹ்வின் மீதான அச்சத்தால் நிறைந்துள்ளது.

எனவே இந்த தரத்தை அடைவது நமது பணியாகும். அவ்வாறு செய்யவில்லையென்றால், பள்ளிவாசல்களை மட்டும் கட்டிவிடுவதும், இங்கு வந்து தலையில் இருக்கும் சுமையை இறக்கி வைக்கும் விதத்தில் வேக, வேகமாக தொழுது விடுவதும் எந்த முக்கியத்துவமும் பெறாது. மனிதன் உயர்தரத்தை அடைந்துவிடும்போது பின்னர் அவன் அல்லாஹ்வின் பார்வையில் ஓர் அப்பழுக்கற்ற குழந்தையைப் போன்று ஆகிவிடுகின்றான். அவரது முடிவு நல்லதாக அமைகின்றது. ஏனெனில், அவர் அல்லாஹ்விற்குரிய

உரிமைகளை வழங்குவதுடன் அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார். நான் மிக அதிகமாக தொழக் கூடியவன் ஆவேன். நான் ஐவேளை தொழுகைகளில் பள்ளிவாசல்களுக்கு செல்கின்றேன். ஜமாஅத்தின் பணிகளையும் செய்து வருகின்றேன். எனவே இதுவே போதுமனதாகும் என எவரும் இந்த விஷயங்களில் ஆணவம் கொள்ளக் கூடாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில்லையோ அவர் அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் வழங்குவதில்லை. (ஜாமிஉத் திர்மிதி, அப்வாப் அல்பிர்ரு வஸ்ஸிலா, ஹதீஸ் எண்: 1984)

எனவே நாம் எந்த தவறான புரிதலிலும் இருக்கக் கூடாது. எவர் இறையச்சத்தையும்,பயபக்தியையும் தன்னுள் கொண்டுள்ளாரோ, மேலும், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்கின்றாரோ அவரே உண்மையான இறை வணக்கம் செய்பவரும், பள்ளிவாசல்களை நிரப்புபவரும் ஆவார். பின்னர், அல்லாஹ் மீண்டும் அழுத்தத்துடன் கூறுகின்றான்: நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்யவில்லையென்றால், அல்லாஹ்விற்காக மார்க்கத்தில் தம்மை தூயவர்களாக ஆக்கிக் கொண்டவாறு தமது நிலைகளை சரியான பாதைகளில் ஆக்கிக் கொள்ளவதற்கு முழுமையான முயற்சி செய்யவில்லையென்றால், நீங்கள் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால். ஷய்த்தான் உங்கள் மீது மேலோங்கி விடுவான். எனவே, அல்லாஹ்விற்கு முன்பு குனிந்தவாறு தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் நிரந்தரமான கவனத்தை செலுத்துங்கள். இன்றைய பௌதீக எண்ணங்கள் நிறைந்த சூழலில் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும். அப்போதுதான், ஒரு களங்கமற்ற குழந்தையைப் போன்று அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராவீர்கள்.

முஸ்லிம்களின் நிலை சீர்கெட்டுப்போனதன் காரணமாக, இஸ்லாத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது. முஸ்லிம்கள் நீதியையும், இறை வணக்கங்களையும் பகட்டாக ஆக்கிக் கொண்டபோதும், அதற்குரிய உரிமையை வழங்காதபோதும் அனைத்தும் வீணாகிவிட்டன. அவர்கள் அழகிய பள்ளிவாசல்களை நிச்சயமாக கட்டிக் கொண்டிருந்தார்கள். இப்போதும் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அஹ்மதிகளின் பள்ளிவாசல்கள் தங்களது பள்ளிவாசல்களைப் போன்ற வடிவத்தில் இருக்கக் கூடாது. அவற்றில் மினாராக்கள் இருக்கக் கூடாது. அவற்றில் மெஹ்ராபுகள் இருக்கக்கூடாது என்பதற்காக அஹ்மதிகளின் பள்ளிவாசல்களை இடிப்பதற்கான அழுத்தமும் இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் உள்ளது. ஆனால், ரஹ்மானின் அடியார்கள் அவர்களில் உருவாகவில்லை. நாம் அஹ்மதிகளின் மீது அநீதியிழைத்து வருகிறோம் அல்லது அவர்களை சரியான பாதையில் கொண்டு வருவதன் பக்கம் அவர்களை ஈர்ப்பதற்கு நாம் முயற்சி செய்து வருகிறோம் என்று அவர்கள் தமது வட்டத்தில் இந்த விஷயங்களை பெருமையாகக் கருதுகின்றனர்.

எவ்வாறு இருப்பினும், முந்தைய காலத்திலும் (முஸ்லிம்களுக்கு) இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. வெளிப்படையில் மட்டுமே பள்ளிவாசல்கள் நிரப்பப்பட்டன. மிக அரிதாகவே சில இடங்களில் உண்மையான முஸ்லிம்கள் தென்பட்டு வந்தனர். எனினும், பொதுவான அளவில் வீழ்ச்சியே இருந்தது. எவ்வாறு இருப்பினும் இவை அனைத்தும் நடக்க இருந்தது. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இது தொடர்பாக நமக்கு அறிவித்து கொடுத்திருந்தார்கள். ஆனால், இந்த இருளான காலத்திற்கு பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையால் ஒளிமயமான காலம் வந்தது. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரிடம் நாம் பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்றுள்ளோம். நாங்கள் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்றும், திருக்குர்ஆனின் போதனைகளின் படி நடப்போம் என்றும் நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அவ்வாறிருக்க நான் ஏற்கனவே கூறியது போன்று மிக அதிகமாக நமது நிலைமைகள் மீது கவனம் செலுத்த வேண்டும். அந்நியர்களின் பள்ளிவாசல்களுக்கு ஏற்பட்ட நிலைமைகளிலிருந்து நாம் நமது பள்ளிவாசல்களை காப்பாற்ற வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மிக விரைவில் ஒரு காலம் வரும். அதில், பெயரளவில் மட்டுமே இஸ்லாம் எஞ்சியிருக்கும். திருக்குர்ஆனின் எழுத்துகளைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்காது. அந்த காலத்து பள்ளிவாசல்கள் வெளிப்படையில் நிறைந்து காணப்படும். ஆனால், நேர் வழியிலிருந்து வெறுமையாக இருக்கும். அவர்களின் ஆலிம்கள் வானத்தின் கீழ் வசிக்கும் படைப்பினங்களில் மிக மோசமான படைப்பினங்களாக இருப்பர். அவர்களிலிருந்தே குழப்பம் உருவாகும். மேலும், அது அவர்களிடமே திரும்பி சென்றுவிடும்.

(அல்ஜாமிஃ லி ஷஅபில் ஈமான், பாகம் 3, பக்கம் 318, பாடம் நஷ்ருல் இல்ம், ஹதீஸ் எண்: 1763, மக்தபதுர் ருஷ்தூன் ரியாஸ்-2003)

இன்றைய நாட்களில் இதே நிலையைத்தான் நாம் பெரும்பாலான முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் பார்த்து வருகிறோம். ஆக, இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்த நிலை நம்மை எச்சரிக்கக் கூடியதாக உள்ளது. அவர்களிடம் குழப்பங்களைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை. எனவே, நான் ஏற்கனவே கூறியதுபோன்று, ஜமாஅத்தின் பள்ளிவாசல்களின் மினாராக்களை இடிப்பதற்கும், அவற்றின் கலசங்களை இடிப்பதற்கும் மட்டுமே அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் (நமது பள்ளிவாசல்களை) பள்ளிவாசல்கள் என்று கூறுவதில்லை. வணக்கஸ்தலம் என்று கூறுகின்றனர். அவர்களின் இந்த செயல் ஒன்றும் மார்க்கத்திற்கு செய்யப்படும் தொண்டு அல்ல. மேலும் எவ்வகையிலும் நீதியும் அல்ல.

எவ்வாறு இருப்பினும், நாம் எவ்வாறு தூயவர்களாக திகழ்ந்து பள்ளிவாசல்கள் மற்றும் அடியார்களின் உரிமைகளை செலுத்த வேண்டும் என்று இந்த விஷயங்கள் நமக்கு படிப்பினையாக உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனங்களில் முதல் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறினார்கள்:

இஸ்லாத்தின் வெளிப்படையான மற்றும் பௌதீக வடிவத்திலும் பலவீனம் வந்துவிட்டது. அந்த வலிமையும், பொலிவும் இஸ்லாமிய அரசாட்சிக்கு இல்லை.

مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ

என்ற வசனத்தில் கற்றுத் தரப்பட்ட விஷயத்தின் முன்னுதாரணம் மார்க்க ரீதியில் தென்படவில்லை.

உட்புற ரீதியில் இஸ்லாத்தின் நிலை மிகவும் பலவீனம் அடைந்துவிட்டது. இஸ்லாத்தை அழித்துவிட வேண்டும் என்று தாக்குதல் நடத்துபவர்கள் விரும்புகின்றனர். அவர்களின் பார்வையில் நாய்கள் மற்றும் பன்றிகளை விட முஸ்லிம்கள் மிகவும் கீழானவர்களாக உள்ளனர். நாம் இஸ்லாத்தை ஒழித்து

முஸ்லிம்களை அழித்துவிட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகவும், எண்ணமாகவும் உள்ளது.

தற்போது, இறை வேதமின்றியும் அதன் உதவியும், தெளிவான அடையாளங்களும் இன்றியும் அவர்களை எதிர்கொள்ள முடியாது. இந்த நோக்கத்திற்காகவே இறைவன் தனது கரத்தால் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 450-பதிப்பு 1984)

எனவே அதுபோன்ற நிலைமைகளில், நாமோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். எனவே, பைஅத்தின் உரிமைகளை நிறைவேற்றியவாறு திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப நாம் நமது நிலைகளை சரி செய்து கொள்ளவில்லையென்றால், நாம் நமது நிலைமைகளின் மீது எப்போதும் பார்வை வைக்கவில்லையென்றால், பின்னர் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக தமது பைஅத்தின் உரிமையை செலுத்த வேண்டிய மக்களைச் சார்ந்தவர்களாகவும், இஸ்லாம் இழந்த கண்ணியத்தை மீண்டும் நிலைநாட்டக் கூடிய மக்களைச் சார்ந்தவர்களாகவும் நாம் கணக்கிடப்பட மாட்டோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வடித்துள்ள இந்த சித்திரம் மிகவும் அபாயகரமான சித்திரம் ஆகும். மேலும், செயல் நிலையிலும் அப்படியே தென்படுகிறது. நீங்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை இழிவாக கருதுகின்றீர்கள். மேலும், உங்களைப் பொருத்த வரை இவர்கள் விலங்குகளை விடவும் மோசமானவர்கள். ஆனால், நினைவிற் கொள்ளுங்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளின் படி செயல்படுவதன் மூலமே உலகம் எஞ்சியிருக்க முடியும் என்று நாம் உலகிற்கு கூற வேண்டும். எனவே, முழுமையான தன்னம்பிக்கையுடனும், அல்லாஹ்வின் அருளாலும் அவனுக்கு முன்னால் குனிந்தவாறு உலகிற்கு வழிகாட்டுவதற்கான பணியை நாம் செய்ய வேண்டும்.

சில இளைஞர்கள் கேள்வி கேட்கின்றனர். நம்மை எள்ளி நகையாடும் மக்களை நாம் எப்படி எதிர் கொள்வது என்று ஓர் இளைஞர் கேட்டார். அதற்கு, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். இன்று உலகம் எஞ்சியிருப்பது நமது கைகளில் உள்ளது என்ற நம்பிக்கையில் நிலைத்திருங்கள் என்றே நான் அவரிடம் கூறினேன். ஏனெனில், உலகிற்கு வாழ்வளிப்பதற்காக அல்லாஹ் அனுப்பியுள்ள அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரையும் நாம் ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். இனி அவருடன் இணைந்திருப்பதன் மூலம் மட்டுமே நம்மால் இம்மை மற்றும் மறுமையை சீர்படுத்திக் கொள்ள முடியும்.

நீங்கள் இந்த உலகியல் பளபளப்புகள் மற்றும் முன்னேற்றங்களில் மகிழ்ச்சி அடைந்து விடாதீர்கள். மரணத்திற்கு பிறகுள்ள வாழ்க்கையே நிரந்தரமான வாழ்க்கையாகும். அங்கு மனிதன் வெறும் கையுடன் சென்றால், பின்னர் அல்லாஹ்வின் கோபத்தை எதிர் கொள்ள நேரிடும். பின்னர் அவன் எப்படி நடந்து கொள்வான் என்பதை அவனே நன்கறிவான் என்று நாம் உலக மக்களுக்கு கூறவேண்டும். ஆயினும், அத்துடன் நாம் இந்த விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, **நாம் உலகை இவ்வளவு விளக்கமாக எச்சரிக்கை செய்யும்போது பின்னர் நமது ஒவ்வொரு சொல்லும், செயலும் அந்த போதனைக்கு ஏற்ப இருக்க வேண்டும். நமது இறை வணக்கங்களின் தரம் உயர்வானதாக இருக்க வேண்டும். அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் நமது தரம் உயர்வானதாக இருக்க வேண்டும்.**

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பின்னர் மீண்டும் இது தொடர்பாக முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாத்தின் சித்திரத்தை வடித்தவாறு மேலும் கூறினார்கள்:

எந்த விஷயத்தின் பெயர் இஸ்லாமாக உள்ளதோ அதில் இக்காலத்தில் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. அனைத்து தீய ஒழுக்கங்களும் நிறைந்துவிட்டன. அதாவது, உயர் நல்லொழுக்கத்தின் எந்த நிலையும் தற்போது நிலைபெற்றிருக்கவில்லை

مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ

என்பதில் கூறப்பட்டுள்ள தூய்மை விண்ணிற்கு சென்றுவிட்டது. அல்லாஹ்வுடனான உண்மை, நன்றியுணர்வு, தூய்மை, அன்பு, நேசம் மற்றும் முழு நம்பிக்கை போன்றவை மறைந்துவிட்டன.

தற்போது, மீண்டும் புதிதாக அந்த ஆற்றல்களை உயிர்ப்பிப்பதற்கு இறைவன் எண்ணம் கொண்டுள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 352-353, பதிப்பு-1984)

எனவே, இஸ்லாத்தின் இந்த வீழ்ச்சிக்குரிய நிலையை சீராக்குவதற்காக, அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபியுடன் நாம் இணைந்திருக்கின்றோம் என்பதற்காக நாம் நன்றி கூறவேண்டும். முஸ்லிம் அல்லாதவர்கள் மற்றும் இஸ்லாத்திற்கு எதிரான மக்கள் இஸ்லாத்தின் மீது தாக்குதல்கள் நடத்தினர். மேலும், அந்த மகத்துவ மிக்க மார்க்கத்தை இழிவாகவும், ஏளனமாகவும் கருதினர். இதில் முஸ்லிம்களின் பங்கும் இருந்தது. முஸ்லிம்கள் சீர்கெட்டுப் போகாமல் இருந்திருந்தால் பின்னர் எதிரிக்கு ஒருபோதும் இஸ்லாத்தின் மீது இதுபோன்ற தாக்குதல்களை நடத்துவதற்கு துணிச்சல் இருந்திருக்காது. எனினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று இன்று நாம் இறைவனுடன் நன்றியுணர்வின் தரத்தை நிலை நாட்டவேண்டும். நாம் தூய்மை மற்றும் நன்றியுணர்வுடன் அல்லாஹ்வின் கட்டளைகளைபடி அமல் செய்ய வேண்டும். எல்லா பக்கமும் அன்பை நாம் பரப்ப வேண்டும். வெறுப்பை அகற்ற வேண்டும். எல்லா பணிகளையும் சீர் செய்யக்கூடியவன் இறைவன் ஆவான். மேலும் இனி உலகில் முழுமையான மார்க்கம் மற்றும் மேலோங்கக் கூடிய மார்க்கம் இஸ்லாமே ஆகும் என்பதில் நமக்கு முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். மேலும், அதற்காக நாம் அனைத்து திறமைகளையும் பயன்படுத்த வேண்டும். மேலும், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வலிமையான உதவியாளராக வேண்டும். இது இறை நியதி ஆகும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைத்துள்ள பணியும், அல்லாஹ் அன்னார் (அலை) அவர்களுடன் செய்துள்ள வாக்குறுதிகளும் இன்ஷா அல்லாஹ் முழுமையடைந்தே தீரும். நாம் அதில் உதவியாளர்களாக திகழ்ந்தால் பின்னர் அல்லாஹ்வின் அருட்களை பெறக்கூடியவர்களாக இருப்போம். நாம் முன்னேறிச் செல்லவில்லையென்றால் அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உதவிக்காக அனுப்பி வைத்துவிடுவான். எவ்வாறு இருப்பினும் இந்த பணி நிகழ்ந்தே தீரும். எனவே நாம் நமது நிலைமைகளின் மீது கவனம் செலுத்த வேண்டும். மேலும், எங்கு பலவீனங்கள் உள்ளனவோ அவற்றை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

என்னென்ன பலவீனங்களை நீக்க வேண்டும்? இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தற்போதைய காலம் எப்படிபட்டதென்றால், இதில் பகட்டு, வினோதம், மற்றும் ஆணவத்தின் ஒரு வகையான சுயநலம் அதாவது தன்னையே அனைத்துமாக கருதுவது, அகந்தை, அகம்பாவம் போன்ற தீய குணங்கள் அதிகமாகிவிட்டன. மேலும்

مُخۡلِصِیۡنَ لَہُ الدِّیۡنَ

போன்ற அழகிய நற்பண்புகள் அனைத்தும் விண்ணிற்கு சென்றுவிட்டன. (அதாவது மறைந்து விட்டன) (மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 353, அடிக்குறிப்பு)

ஆக, அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த அனைத்து தீமைகளும் தற்போது அதிகமாகிவிட்டன. நன்மைகள் முடிந்து விட்டன. ஆனால், தனது அடியார்கள் மீது அல்லாஹ் அதிகம் கருணை கொண்டவன். அவன் அடியார்களை வீணாக்க விரும்புவதில்லை. நன்மைகள் அதிகரிக்க வேண்டும் என்றும், தீமைகள் அழிய வேண்டும் என்றும் அவன் தற்போது எண்ணம் கொண்டுள்ளான்.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்வதற்காக நாம் நமது பங்களிப்பை வழங்குகின்றோமா? தீமைகள் அழிவதற்காக நாம் முழு முயற்சி செய்து வருகின்றோமா? நன்மைகளை மேற்கொள்வதற்காக முழு முயற்சி செய்து வருகின்றோமா? இறைவணக்கத்தின் தரத்தை பெறுவதற்காக நாம் முழு முயற்சி செய்து வருகின்றோமா? என்று நம்மில் ஒவ்வொருவரும் ஆய்வு செய்ய வேண்டும்.

நன்மைகள் செய்வதற்குரிய நற்பேறு என்பதும் கூட இறையருளாலேயே கிடைக்கின்றது. இறை வணக்கத்தால் கிடைக்கின்ற அல்லாஹ்வின் அருளை பெறுவதற்காக நாம் முழு முயற்சி செய்யவில்லையென்றால், மேலும் இறை வணக்கங்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக மட்டுமே அல்லாமல் வெறும் தமது விருப்பங்களை முழுமை செய்வதற்காக அமைந்திருக்கும் என்றால், பின்னர் நமது முயற்சிகள் வீணானவையாகும் அல்லது அந்த விஷயங்களை அடைவதற்கான விருப்பம் என்பது வீணானது ஆகும்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

எனவே மிகவும் ஆழமாக ஆய்வு செய்வதற்கான அவசியம் உள்ளது. மிக அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப தொடர்ந்து செயல்பட்டு வருவதற்கான அவசியம் உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

مُخۡلِصِیۡنَ لَہُ الدِّیۡنَ

என்று அல்லாஹ் கூறியதுபோன்று நற்செயல்களுக்கு தூய்மை நிபந்தனையாகும். அப்தால் எனும் நல்லடியார்களிடம் இந்த தூய்மை இருக்கின்றது.

கூறினார்கள்: நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். எந்த நபர் அல்லாஹ்விற்காக ஆகிவிடுகின்றாரோ அல்லாஹ் அவருக்கானவனாக ஆகிவிடுகின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 354, பதிப்பு 1984)

எனவே இந்த வழிமுறையை மேற்கொள்வதற்கான அவசியம் உள்ளது. நாம் சுயமே அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்கிவிட முடியாது. அல்லாஹ் நமது துஆக்களை கேட்பதில்லை என்று மக்கள் கூறிவிடுகின்றனர். சில மக்கள் முறையீடும் செய்கின்றனர்.

நாம் எந்த அளவிற்கு அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கியுள்ளோம் என்று ஆய்வு செய்து பாருங்கள். அல்லாஹ் எந்த அளவுக்கு கருணையாளன் என்றால், நமது எண்ணற்ற தவறுகள் இருந்தபோதும் நமக்கு அவன் அருளிக் கொண்டே செல்கின்றான்.

எனவே நாம் எவ்வாறு இறைவனுக்குரிய உரிமையை வழங்க வேண்டும்? என்ற விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நாம் இறைவணக்கத்திற்குரிய உரிமையை வழங்குவதே அல்லாஹ்விற்குரிய மாபெரும் உரிமையாகும். நாம் பள்ளிவாசலைக் கட்டியுள்ளோம். எனவே நாம் அதற்குரிய உரிமையை செலுத்த வேண்டும். எனவே அதில் தூயவர்களாக, அவனை வணங்குவதற்காக வருகை தாருங்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:

நான் என்னை வணங்குவதற்காக மனிதர்களையும், ஜின்களையும் படைத்துள்ளேன். ஆயினும், இந்த இறைவணக்கமும், கண்ணியத்திற்குரிய இறைவனுக்கு முன்னால் நிரந்தர பணிவுடன் நிற்பதும் (இறைவன் மீதான) தனிப்பட்ட அன்பு இல்லாமல் சாத்தியமில்லை. அன்பு என்பதன் பொருள் ஒரு தலைபட்சமான அன்பு அல்ல. மாறாக, படைத்தவன் மற்றும் படைப்பினம் இருவருக்குமான அன்பு என்பது அதன் பொருள் ஆகும். அப்போது தான் அது நெருப்பைப் போன்று, மரணிக்கப் போகும் மனிதனின் மீது விழுகின்றது. மேலும், அது அந்த நேரத்தில் அந்த மனிதனிடமிருந்து வெளிப்படுகின்றது. மனித இயல்பின் பலவீனங்களை எரித்துவிடுகின்றது. மேலும் இருவரும் இணைந்து அனைத்து ஆன்மீக இருப்பின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதற்காக அவ்வாறு நிகழ்கின்றது. (ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி ஹஸாயின் தொகுதி 21, பக்கம் 217-218)

எனவே நிரந்த கவனத்துடன் நமது தொழுகைகளை நாம் பாதுகாக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது அன்பு இருக்கும் போதுதான் இது சாத்தியமாகும். எப்படிபட்ட தனிப்பட்ட அன்பு இருக்க வேண்டும் என்றால் அது போன்ற அன்பு வேறு எவர் மீதும் இருத்தல் கூடாது. அப்போதுதான், மனிதனின் அல்லாஹ்வின் மீதான நேசமும், அடியாருக்கு அல்லாஹ்வின் மீதான நேசமும் அர்த்தம் கொண்டதாக அமையும். அடியார்களுடைய அல்லாஹ்வின் மீதான அன்பும், நேசமும் ஒரு புரட்சியைக் கொண்டு வரக்கூடிய விளைவுகளை உருவாக்குகின்றது.

ஆக, எந்த மக்கள் சிறிது துஆ செய்துவிட்டு சோர்வடைந்து-விடுகின்றார்களோ அல்லது எவர்கள் துஆவின் தத்துவத்தை புரிய விரும்புகின்றார்களோ, மேலும், எவர்கள் இறைவனுடன் தொடர்பை உருவாக்க விரும்புகின்றார்களோ அவர்கள் இந்த அடிப்படையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெறும் தேவைகளுக்கான நேரத்தில் மட்டும் வேண்டுவதற்காக அல்லாஹ்வின் வாசலுக்கு செல்லக்கூடாது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மாறாக, அல்லாஹ்வின் மீது ஒரு தனிப்பட்ட அன்பை உருவாக்க வேண்டும். பின்னர் அத்தகைய மனிதனிடம் அல்லாஹ்வும் அன்பு கொள்கின்றான். மேலும் அதற்கு, அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்படுவது அவசியம் ஆகும். அல்லாஹ்வின் தூதருடன் அன்பு கொள்வதும் அவசியமாகும். மேலும், அன்பின் உணர்வுடன் கட்டுப்பட வேண்டும். பின்னர் அல்லாஹ்வுடைய அன்பின் வெளிப்பாடும் நிகழும். இந்த இரண்டு அன்பும் இணைந்துவிடும் போது பின்னர், ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் அருட்களின் மழை பொழிகின்றது. அது மனிதனின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும்.

பின்னர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

مَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

என்று இறைவன் கூறியது போன்று மனிதன் இயல்பிலேயே இறைவனுக்காகவே படைக்கப்பட்டுள்ளான். எனவே அவனது இயல்பிலேயே இறைவன் தனக்கான ஏதோ ஒன்றை வைத்திருக்கின்றான். மறைவிலும் மறைவான காரணிகளால் அவனை தனக்காக படைத்துள்ளான்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்பதை அவன் உங்களது படைப்பின் அசல் நோக்கமாக வைத்துள்ளான். ஆனால், எந்த மக்கள் தமது இந்த அசல் நோக்கத்தையும், இயல்பையும் விட்டுவிட்டு விலங்குகளைப் போன்று உண்பதையும், பருகுவதையும், உறங்கிக் கொண்டிருப்பதையும் வாழ்வின் நோக்கமாக புரிந்து கொண்டார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருட்களிலிருந்து வெகு தொலைவில் வீழ்ந்து கிடக்கின்றனர். அத்தகைய மக்களுக்கு இறைவன் பொறுப்பேற்க மாட்டான். பொறுப்பு மிக்க வாழ்க்கை என்பது இதுவே ஆகும். அதாவது,

مَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

என்பதன் மீது ஈமான் கொண்டு வாழ்க்கையின் அம்சத்தை மாற்றிக் கொள்வது ஆகும். அதாவது, இறை வணக்கத்தை தமது நோக்கமாகவும், எண்ணமாகவும் ஆக்கிக் கொள்வதை முழுமையாக பேணி நடக்க வேண்டும்.

கூறினார்கள்: மரணம் எப்போது வரும் என்று தெரியாது. உங்களை படைத்ததன் மூலம் இறைவனின் நோக்கம் இதுவே ஆகும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அதாவது நீங்கள் அவனை வணங்க வேண்டும். மேலும், நீங்கள் அவனுக்காக ஆகிவிட வேண்டும். உலகம் உங்களது தனிப்பட்ட வாழ்வின் நோக்கமாக ஆகிவிடக் கூடாது.

கூறினார்கள்: எனவே தான் நான் மீண்டும், மீண்டும் இந்த விஷயத்தை எடுத்துரைக்கின்றேன். என்னைப் பொருத்தவரை இந்த ஒரு விஷயத்திற்காகவே மனிதன் (உலகிற்கு) வந்துள்ளான். (ஆனால்) அதிலிருந்து அவன் விலகி நிற்கின்றான்.

கூறினார்கள்: நீங்கள் உலக வியாபாரங்களை விட்டு விடுங்கள் என்றும், மனைவி, மக்களிடம் இருந்து விலகிச் சென்று ஏதாவது காடு அல்லது மலையில் சென்று அமர்ந்து விடுங்கள் என்றும் நான் கூறவில்லை. இஸ்லாம் அதனை அங்கீகரிக்கவில்லை. உலக வியாபாரங்களையும் செய்யுங்கள். மனைவி, மக்களுடைய உரிமைகளையும் நிறைவேற்றுங்கள். அதுவே இஸ்லாத்தின் போதனையாகும்.

கூறினார்கள்: துறவறம் (மேற்கொள்வது) இஸ்லாத்தின் விருப்பம் கிடையாது. மனிதனை சுறுசுறுப்பானவனாகவும், புத்திசாலியாகவும், தகுதியுடையவனாகவுமே இஸ்லாம் ஆக்க விரும்புகின்றது. எனவே, நீங்கள் உங்கள் வியாபரத்தை கடின உழைப்புடன் செய்யுங்கள் என்றே நான் கூறுகின்றேன். ஹதீஸில் வந்துள்ளது: எவரிடம் நிலம் இருக்குமோ அவர் அதனை வீணாக்கக் கூடாது. (அவர் அதனை வீணாக்கிவிட்டால்) அவரிடம் (அது குறித்து) விசாரிக்கப்படும்.

ஆக இதிலிருந்து, உலக வியாபாரங்களிலிருந்து விலகி விடவேண்டும் என்று ஒருவர் பொருள் கொண்டால் அவர் தவறிழைக்கின்றார். (எனவே நான் கூறியதன் பொருள்) அதுவல்ல. அசல் விஷயம் என்னவென்றால், நீங்கள் செய்யும் அனைத்து வியாபாரங்களிலும் இறைவனின் திருப்தி நோக்கமாக உள்ளதா? என்பதை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். மேலும், இந்த நோக்கத்திலிருந்து நீங்கள் வெளியேறி உங்களது சொந்த நோக்கங்களுக்கும், உணர்வுகளுக்கும் நீங்கள் முன்னுரிமை வழங்கக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 181-184, பதிப்பு 1984)

எனவே, இது மிகவும் சிந்திப்பதற்கும், கவனம் செலுத்துவதற்குமான இடம் ஆகும். அன்னார் (அலை) தற்போது மிகவும் வேதனையுடன் கூறுகின்றார்கள்: நான் இதன் பக்கம் மீண்டும், மீண்டும் கவனமூட்டுகிறேன். உங்களது வாழ்வின் நோக்கம் என்ன? என்ற விஷயத்தை நீங்கள் மறந்துவிடாதீர்கள்.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததாக வாதம் புரிந்துவிட்டு நமது வாழ்வின் நோக்கத்தை நாம் மறந்துவிட்டால், பின்னர் நமது பைஅத் பயனற்றதாகும். நமது சொற்கள் பொருளற்றதாகும்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் மிகவும் சிந்திக்க வேண்டும். ஒரு நாள் முழுவதும் நாம் எத்தனை நிமிடம் அல்லாஹ்வை வணங்குவதற்காக செலவிடுகின்றோம்? என்று சிந்தியுங்கள். ஆய்வு செய்து பாருங்கள். நாம் சில நிமிடங்கள் தொழுதுவிட்டு அதுவும் சிலவற்றை புரிந்து கொண்டும், சிலவற்றை புரியாமலும் தொழுதுவிட்டு நமது வாழ்வின் நோக்கத்தை நாம் அடைந்துவிட முடியுமா!

உலகியல் வியாபாரங்களை செய்வதிலிருந்து அல்லாஹ் நம்மை தடுக்கவில்லை. மாறாக, ஓர் உண்மையான நம்பிக்கையாளர் தனது வேலையிலும், தனது வியாபாரத்திலும், தனது வணிகத்திலும், தனது விவசாயத்திலும் உயர் தரமான இடத்தை அடைய வேண்டும் என்று இறைவன் எதிர்பார்க்கின்றான். ஆயினும், இந்த உலகியல் பணிகளில் நீங்கள் உங்களது படைப்பின் நோக்கத்தை மறந்து விடக் கூடாது. உங்களது தொழுகைகளை பாதுகாக்க வேண்டும் என்று அத்துடன் கூறியுள்ளான்.

மஸ்ஜித் கட்டியுள்ளீர்கள் என்றால், அதன் வெளிப்படையான அழகில் நீங்கள் பெருமை கொள்ளக் கூடாது. மாறாக, அதன் அசல் அழகு என்பது உண்மையான இறைவணக்கங்களை மேற்கொள்ளும் நபர்களால் உருவாகின்றது. அதனை கருத்தில் கொள்ளுங்கள். இறையச்சத்தின் வழி நடவுங்கள். தக்வாவின் தரங்களை பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள். இவை இருக்கும்போது தான் நீங்கள் உண்மையான இறைவணக்கம் செய்யும் மக்களாக அழைக்கப்படுவீர்கள்.

பின்னர், அல்லாஹ் கூறியுள்ளான்: புற மற்றும் அகத் தூய்மைக்கான ஏற்பாட்டை செய்வதும் உண்மையான இறை வணக்கத்தை மேற்கொள்ளக் கூடியவர்களின் பணியாகும். எனவே, தொழக்கூடியவர்களுக்கான பொதுவான கட்டளை என்னவென்றால், அவர்கள் தமது ஆடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். மேலும், ஒவ்வொரு தொழுகைக்கு முன்பும் வுளு செய்ய வேண்டும். ஏனெனில், புறத் தூய்மை மனிதனின் உட்புறத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல உளு செய்வதன் மூலம் மனிதன் பொதுவாக

புத்துணர்வு பெறுகின்றான். மேலும், தொழுகையின் பக்கம் கவனம் நிலைபெற்றிருக்கவும் செய்கின்றது.

அடுத்து, தொழுகையுடன் மற்றொரு கட்டளையும் உள்ளது. அது என்னவென்றால், உண்ணுங்கள். பருகுங்கள். ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள். இதன் ஒரு பொருள் என்னவென்றால் சீரான உணவு எடுக்கப்பட வேண்டும். அதாவது ஒரு நம்பிக்கையாளர் உணவிலும், பருகுதலிலும் வரம்பு மீறக் கூடாது. வரம்பு மீறாமல் இருப்பதனால் அவரது ஆரோக்கியமும் சரியாக இருக்கும். மேலும் இறை வணக்கத்தையும் சரியான முறையில் நிறைவேற்ற முடியும். இரண்டாவதாக, இந்த பொருளும் உள்ளது. அதாவது, உண்பதும், பருகுவதும், உறங்கிக் கொண்டிருப்பதும் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் வாழ்வின் நோக்கம் கிடையாது. அல்லாஹ் அவற்றை விலங்குகளின் சிறப்பம்சமாக குறிப்பிட்டுள்ளான். தற்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை வாசித்திருந்தேன். அதிலும், அன்னார் (அலை) இந்த விஷயத்தை விளக்கியிருந்தார்கள். அதாவது, இவை விலங்குகளின் பணியாகும். அதனை மேலும் விவரித்தால், அதிலிருந்து இந்த விளக்கமும் கிடைக்கின்றது. அதாவது, நீங்கள் வெறும் உலகியல் பொருட்கள் மற்றும் விருப்பங்களுக்கு பின்னால் சென்றுவிடாதீர்கள். மாறாக, உங்களது படைப்பின் நோக்கத்தை அடையாளம் காணுங்கள். ஓர் உண்மையான நம்பிக்கையாளர் நிச்சயமாக உலகியல் பணிகளையும் செய்கின்றார். ஆயினும், தற்போது தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டது. நான் தொழ வேண்டும் என்ற எண்ணமே இல்லாத அளவிற்கு அவர் அதில் மூழ்கி விடுவதில்லை. மாறாக, தொழுகைக்கான நேரங்களில் அவருக்கு உடனடியாக இந்த எண்ணம் வந்துவிட வேண்டும். அதாவது, தற்போது எனது உலகியல் பணிகளுக்கான நேரம் முடிந்துவிட்டது. இனி நான் அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராக வேண்டும். மேலும், அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்கியவாறு தொழ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்துவிட வேண்டும். மேலும், வேக வேகமாக தொழக் கூடாது. மாறாக, தொழுகையை அழகுபடுத்தி தொழ வேண்டும். தமது புறத் தூய்மை மற்றும், அழகுடன் தமது உள்ளத்தையும் இறையச்சம் எனும் அழகால் நிறைக்க வேண்டும்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக உங்களுக்கு உண்பதற்கும், பருகுவதற்கும் அனுமதி உள்ளது. எல்லா தூய, பரிசுத்தமான பொருட்களும் உங்களுக்குக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவை அனுமதிக்கப்பட்டவை ஆகும். வியாபரங்கள் செய்வதற்கும், உலகியல் பணிகளை செய்வதற்கும் உங்களுக்கு அனுமதி உள்ளது. ஆனால், இந்த விஷயங்கள் அல்லாஹ்வின் வணக்கத்திலிருந்து உங்களை தடுத்தால், மஸ்ஜிதிற்கு செல்வதையும், இறைவணக்கத்திற்கான எண்ணத்தையும் மறக்கடித்தால் அவை வரம்பு மீறுதலாகும். மேலும், அல்லாஹ் வரம்பு மீறுதலை விரும்புவதில்லை. ஐவேளை தொழுகைகள் எப்படி கடமையாக்கப்பட்டுவிட்டன? இன்றைய காலத்தில் இது மிகக் கடினமான பணியாகும். ஐவேளை தொழுகை-களுக்காக மனிதன் எப்படி தனது பணிகளிலிருந்து வெளியேற முடியும்? என்று மக்கள் கேட்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்: இது கடினமல்ல. இன்னும் கூறப்போனால், உலக விஷயங்களை குறித்து மட்டுமே நீங்கள் கவலை கொள்வதும், அல்லாஹ்வை மறந்துவிடுவதும் வரம்பு மீறுதலாகும். பின்னர், இந்த விஷயம் கொஞ்சம், கொஞ்சமாக உங்களை அல்லாஹ்விடமிருந்தே விலக்கி கொண்டு சென்று விடும். மனிதன் மீது அல்லாஹ்வின் அதிருப்தி வெளிப்பட்டுவிட்டால் பின்னர் மனிதனால் எங்கும் தாக்குப் பிடிக்க முடியாது. (அத்தகைய மனிதன்) நான் முஸ்லிம் ஆவேன். நான் அஹ்மதி ஆவேன். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப காலத்தின் இமாமிடம் பைஅத் செய்துள்ளேன் என்று அவர் வாயளவில் கூறிக் கொண்டு நடக்கட்டும். ஆனால், அவரது செயல் அல்லாஹ்வின் அதிருப்தியை சுமந்து கொண்டு இருக்கின்றது.

எனவே, உலகையும் சம்பாதியுங்கள். ஆனால், மார்க்கத்தை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள், அதில் வரம்பு மீறாதீர்கள் என்று அல்லாஹ் மிகவும் நடுநிலையான போதனையை நல்கியுள்ளான். மேலும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். மனிதன் உண்மையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றான் என்றால், பின்னர் அல்லாஹ் அவருக்காக புதுப் புது வழிகளையும் திறந்து கொடுக்கின்றான். மேலும் அவரது பணிகளில் அருளையும் வழங்குகின்றான். எனவே, எவர் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பாரோ மேலும், தமது வாழ்க்கையை அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஆக்கிக் கொள்வாரோ, மேலும், தமது இறைவணக்கங்களில் தரத்தை பெறுவதற்கு முயற்சி செய்வாரோ அவருக்கு அல்லாஹ்வின் அருளால் உலகத் தேவைகளும் நிச்சயம் கிடைத்து விடுகின்றது. ஆயினும், உலக பேராசைகள் அதிகரித்து கொண்டே செல்கின்றன. அது அதிகரித்து விட்டால், அது ஒருபோதும் அணையாத நெருப்பாக அமையும். மனிதன் மார்க்கத்தில் நிலைநின்றால், பின்னர் இந்த உலக ஆசைகள் எனும் நெருப்பு எல்லாநேரமும் எரிவதில்லை.

உலக ஆசைகள் எப்படிபட்ட நெருப்பு என்றால், அவை ஒருபோதும் அணையாது. மனிதன் அவற்றில் எரிந்து சாம்பலாகிவிடுவான். உண்மையான வாழ்கையான மறுமையிலும் எதுவும் கிடைக்காது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இறைவன் மீதும் மறுமை நாள் மீதும் ஈமான் கொள்கின்ற மக்களே அல்லாஹ்வின் மஸ்ஜிதை நிரப்புகின்றனர்.

எனவே, பள்ளிவாசலை நிரப்பக்கூடிய, அந்த நம்பிக்கை கொண்ட மக்களைச் சார்ந்தவர்களாக நாம் இருக்க வேண்டும். பள்ளிவாசலை நிரப்பக் கூடியவர்களின் அடையாளம் என்னவென்றால், அவர்கள் ஒரு தொழுகைக்குப் பிறகு அடுத்த தொழுகை வரை காத்திருக்கின்றனர்.

(சுனன் திர்மதி, அப்வாபுஸ் ஸஹர், ஹதீஸ் எண்:2391, அப்வாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 2671)

எப்போது நேரம் வரும் நாம் தொழுகைக்காக செல்லலாம் என்று அவர்கள் காத்திருக்கின்றனர்.

ஆக, பள்ளிவாசலை நிரப்ப வேண்டும் என்பது பள்ளிவாசல் கட்டுவதின் நோக்கம் ஆகும். எனவே, தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்ட பிறகு, அதனை நிரப்புவது இங்கு வசிக்கக் கூடியவர்களின் பணியாகும். அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்கும், தம்மையும், தமது சந்ததிகளையும் சீர்திருத்துவதற்கும், அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இதுவே வழிமுறையாகும். இல்லையென்றால், தற்போதைய காலத்தின் பொழிவும், பளபளப்பும் நமது சந்ததிகளை மார்க்கத்திலிருந்து தொலைவில் விலக்கி கொண்டு சென்றுவிடும். குழந்தை பருவம் முதலே அவர்களை பள்ளிவாசலுடன் இணைத்து வைப்பதும், மார்க்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதும் அவசியம் ஆகும். இது தாய்,தந்தை

இருவரின் பணியாகும்.

அத்துடன் இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டதால், திறக்கப்பட்டுவிட்டதால் ஜமாஅத்தின் அறிமுகம் மேலும் அதிகமாகும். மஸ்ஜித் மற்றும் இஸ்லாத்தைக் குறித்த அறிமுகம் ஏற்படும். அதனால் தப்லீக்கிற்கான வழிகள் திறந்துவிடும். மேலும் தொடர்புகள் அதிகரிக்கும். எனவே அதிலிருந்து பயனடைந்தவாறு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதும் ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தற்போது நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாசல்களுக்கான அதிக தேவை உள்ளது. அவை இறை இல்லம் ஆகும். எந்த கிராமத்தில், நகரத்தில் நமது பள்ளிவாசல் நிறுவப்பட்டுவிட்டதோ ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். ஆனால், கூறினார்கள்: நிபந்தனை என்னவென்றால், பள்ளிவாசலை நிறுவதில் எண்ணம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அல்லாஹ்விற்காக அவை கட்டப்பட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 119, பதிப்பு 1984)

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று பள்ளிவாசல் மூலமாக ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் அமைப்பட்டுவிட்டது. இங்குள்ள அஹ்மதிகளின் முயற்சிகள் தூய்மையானதாக இருக்குமென்றால், இறை வணக்கங்களின் தரம் உயர்ந்ததாக இருக்குமென்றால் பின்னர் இன்ஷாஅல்லாஹ் தற்போது இங்கும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். எனவே உங்களது இறை வணக்கங்கள் மற்றும் தூய்மையின் தரத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். உங்களது சந்ததிகளிடத்திலும் அந்த தூய்மை மற்றும் துஆவின் முக்கியத்துவத்தையும், இறைவணக்கத்தின் முக்கியத்துவத்தையும் பகிர்ந்து கொண்டே செல்லுங்கள். அவ்வாறு செய்தால் இந்த பௌதீக உலகை நேசிப்பவர்களிடத்திலும் புரட்சி ஏற்படுவதை நாம் பார்ப்போம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பள்ளிவாசல்களின் அசல் அழகு என்பது கட்டடங்களுடன் இல்லை. மாறாக, தூய்மையுடன் தொழுகைகளை நிறைவேற்றும் அவற்றின் தொழுகையாளிகளுடன் உள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 170, பதிப்பு 1984)

தூய்மையுடன் தொழக்கூடியவர்களாக திகழ்வதற்கும், இந்த பள்ளிவாசலை நிரப்புவதற்கும் அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. அல்லாஹ் நமது துஆக்களையும், இறை வணக்கங்களையும் ஒப்புக் கொள்வானாக. (ஆமீன்)

தமிழாக்கம் :

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

**பணிவு**

கூறினார்கள்: மனிதனுக்கு வெற்றி கிடைக்கும்போதும், அவன் ஏழ்மை மற்றும் துன்ப நிலையில் இல்லாத போதும் அந்தநேரத்தில் எந்த நபர் பணிவை மேற்கொள்வாரோ மேலும் இறைவனை நினைவில் வைப்பாரோ அவர் முழுமையானவர் ஆவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 416- காதியான் பதிப்பு 2018)

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் யூதத்துவத்தையும், கிறித்துத்தையும் உண்டிருப்பார்கள். நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும். அதனைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَجَاهِدْهُمْ بِهِ

இந்த திருக்குர்ஆன் எனும் வாளை எடுத்துக் கொண்டு உலகத்துடன் ஜிஹாத் செய்வதற்கு புறப்பட்டு விடுங்கள். ஆனால், வேதனை என்னவென்றால், இன்று எல்லா உலகியல் பொருட்களும் முஸ்லிம்களின் கையில் உள்ளன. ஆனால், இந்த வாள் மட்டுமே (முஸ்லிம்களிடம்) இல்லை. எந்த வாளை ஏந்திக் கொண்டு புறப்படுவதற்கு கட்டளை வழங்கப்பட்டதோ அது அவர்களிடம் இல்லை.

مَا يَمْنَعُ مِنَ الْجَهْلِ

என்பதன் அடிப்படையில் வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, நீங்கள் மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வழிமுறையில் உரையாடுங்கள். மேலும், பிறரது தவறான புரிதல் நீங்கும் வழிமுறையிலும் உரையாடுங்கள். அதாவது, அறிவீனத்திற்கு முடிவுகட்டும் விஷயங்களை பேசவேண்டும். மேலும், கேட்பவரின் புரிதலுக்கேற்ப பேச்சு இருக்க வேண்டும்.

ஆக, ஹதீஸிலும் இவ்வாறு வருகிறது:

أَمَرَنَا رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ
وَسَلَّمَ أَنْ نُكَلِّمَ النَّاسَ عَلَى قَدْرِ عُقُوْلِهِمْ

மக்களுடன் அவர்களின் புரிதல் மற்றும் அறிவிற்கேற்ப உரையாடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள்.

சில நபர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும்போது பெரும், பெரும் சொற்களையும், சொற்றொடர்களையும் பயன்படுத்தி (மக்கள் மீது) மதிப்பச்சத்தை ஏற்படுத்த விரும்புகின்றனர். அந்த சொற்பொழிவுகளால் நிச்சயமாக அறிவீனர்களிடம் (சொற்பொழிவாளர் மீது) மதிப்பச்சம் ஏற்பட்டு விடும். ஆனால், அவர்களின் சொற்பொழிவுகளிலிருந்து எவரும் பயனடைய மாட்டார்.

உண்மைக்கேற்ற உரையாடலையும் ஹிக்மத் என்று கூறுவார்கள். இந்த பொருள்களின் அடிப்படையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, உண்மையான மற்றும் நிகழ்வுகளுக்கு ஏற்ற விஷயங்களை பேசுங்கள். சிலர் தவறான கூற்றுகளையும் எடுத்துரைத்துவிடுகின்றனர்.

கூறினார்கள்: இந்த வழிமுறை தவறாகும். எதிரிக்கு எதிராக என்ன விஷயம் கூறினாலும் உண்மையை பேசுங்கள். மற்றவர்களுக்கு நேர்வழி காட்டியவாறு நீங்கள் சுயமே வழி தவறிவிடாதீர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

لَا يَضُرُّكُمْ مَّنْ ضَلَّ إِذَا اهْتَدَيْتُمْ

(அல்மாயிதா:106) அதாவது நீங்கள் நேர்வழியில் நிலைபெற்றுள்ளீர்கள் என்றால் பின்னர் மற்றவர் வழிதவறிவிடுவார் என்று நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். அதாவது, பாவத்திற்குரிய விஷயத்தின் மூலமாக நான் மற்றவருக்கு நேர் வழி வழங்குவேன் என்ற எண்ணத்தில் தவறான விஷயத்தை பேசாதீர்கள். உங்களது நேர்வழி மற்றவரின் நேர்வழியுடன் மோதினால் அந்த நேரத்தில் நீங்கள் உங்களது நேர்வழியைக் குறித்து கவலை கொள்ளுங்கள். மேலும், மற்றவரின் நேர்வழியை இறைவனிடம் விட்டு விடுங்கள். நம்பிக்கையாளர் நிராகரிப்பாளராகி, நிராகரிப்பாளர் நம்பிக்கையாளராகிவிடுவதையும் அல்லாஹ் விரும்புவதில்லை. அவன் மற்றவர்களுக்கு நேர்வழி வழங்க விரும்புகின்றான்.

இடம், பொருளுக்கேற்ற பேச்சுகளையும் ஹிக்மத் என்று கூறுவர். இந்த பொருள்களின் அடிப்படையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, தப்லீக்கில் பொருத்தமான விஷயங்கள் பேசபட வேண்டும். சில ஆதாரங்களின் மூலம் எதிரி சிதறுண்டுவிடுவார் என்ற அச்சம் இருந்தால், மேலும் அதனால் அவர் உங்களது கூற்றை செவிமடுக்க மாட்டார் என்ற அபாயம் இருந்தால், பின்னர் தேவையின்றி அவரை சீண்டுவது உகந்ததல்ல.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 273, காதியான் பதிப்பு 2010)

* * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாகவும், நமது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளில் மேன்மையை உருவாக்குவது தொடர்பாகவும் அறிவுரைகள்**

**கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதும், அதற்கு கட்டுப்படுவதும் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். இல்லையென்றால் பைஅத் பொருளற்றதாகும்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மோரிலேண்ட், அமெரிக்காவிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலில் 14 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **14ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இது உங்கள் மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மாபெரும் கருணையாகும். இங்கு இந்த நாட்டிற்கு வரக்கூடிய மக்கள் மீது மாபெரும் கருணையாகும். அதாவது அவன் இந்த முன்னேற்றமடைந்த நாட்டிற்கு வருவதற்கு நற்பேறு வழங்கியுள்ளான். மேலும், குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் பாகிஸ்தானிலிருந்து இங்கு ஏராளமான அஹ்மதிகள் வந்துள்ளனர். மேலும், தற்போதும் வந்து கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானில் அஹ்மதிகளின் சூழல் கடினத்திலும் கடினமாகிக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது என்பதாலும், அங்கு வசிப்பது கடினமாகிவிட்ட காரணத்தினாலும் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்து மக்கள் வந்துள்ளனர். எனவே, இந்த அடிப்படையில் அங்கிருந்து வந்துள்ள அஹ்மதிகள் இந்த அரசாங்கங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். இந்த அரசாங்கங்கள் ஏராளமான அநீதியிழைக்கப்பட்ட அஹ்மதிகளுக்கு இங்கு வசிப்பதற்கு இடமளித்துள்ளன. ஆனால், அஹ்மதிகளாகிய நம் மீது அல்லாஹ் செய்துள்ள மாபெரும் கருணை இதுவாகும். அதாவது, அவன் நமக்கு காலத்தின் இமாமையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரையும் ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு வழங்கியுள்ளான்.

எனவே நாம் இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும், அது குறைவாகும். மேலும், அல்லாஹ்விற்கு செலுத்தும் நன்றி என்பது இதுவாகும். அதாவது, நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை பேணி நடக்க வேண்டும். மேலும், அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாக வேண்டும். மேலும், அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாக வேண்டும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடியவர்களாக திகழும்போதுதான் அது சாத்தியமாகும். ஏனெனில், இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி நம்மை வழி நடத்தக்கூடிய தலைவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள்.

எனவே, இந்த விஷயத்தை ஒவ்வொரு அஹ்மதியும் தமது கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, தற்போது உண்மையான இஸ்லாத்தின் போதனை நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலம் மட்டுமே கிடைக்க முடியும். ஏனெனில், அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கே திருக்குர்ஆனின் ஞானங்களையும், அறிவையும் வழங்கியுள்ளான். மேலும், அன்னாரே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக உள்ளார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனை மற்றும் சுன்னத்திற்கேற்ப தமது ஜமாஅத்திற்கு தர்பிய்யத் வழங்க விரும்புகின்றார்கள். எனவே, நாம் உண்மையான முஸ்லிம்களாக திகழ்வதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பக்கமே பார்க்க வேண்டும். மேலும், அன்னார் (அலை) கூறியுள்ள வழிமுறைக்கேற்ப நாம் நமது வாழ்க்கையை ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் நமது ஈமானை நாம் உறுதியானதாக ஆக்க வேண்டும். அன்னாரின் வருகையின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் கொள்ள வேண்டும். அன்னாரை நீதி நெறி தீர்ப்பராக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், தற்போது, அன்னார் எடுத்துரைத்துள்ள வழிமுறையின் படி நடந்தால் தான் மனிதன் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் வழி நடக்க முடியும் என்ற நம்பிக்கையில் நாம் நிலைபெற்றிருக்க வேண்டும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம் மீதான முழுமையான நம்பிக்கையிலும், ஈமானிலும் நிலைபெற்றிருப்பதற்கு அறிவுரை வழங்கியவாறு தம்மிடம் பைஅத் செய்தவர்களிடம் கூறுகின்றார்கள்:

எந்த நபர் ஈமான் கொள்கின்றாரோ அவர் தமது ஈமானில் உறுதி மற்றும் இறை ஞானம் வரை முன்னேற்றம் காண வேண்டும். வெறும் ஈமான் கொண்டால் போதாது. மாறாக, அதில் உறுதியும் ஏற்பட வேண்டும். நாம் ஏன் பைஅத் செய்கின்றோம்? என்ற ஞானத்தையும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறல்லாமல், மீண்டும் தப்பெண்ணத்தால் சூழப்பட்டு விடக்கூடாது. அடுத்து, இது ஏன் நடந்தது? அது ஏன் நடந்தது? என்று உள்ளத்தில் தப்பெண்ணங்கள் உருவாகிவிடக் கூடாது. கேள்விகள் எழத் தொடங்கிவிடக் கூடாது. கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். யூகங்கள் பயன் அளிக்க முடியாது.

إِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا (யூனுஸ்:37) என்று இறைவன் கூறுகின்றான். நிச்சயமாக, யூகம் உண்மையின் இடத்தில் எந்தப் பலனும் அளிப்பதில்லை. நிச்சயமாக, உண்மை எப்படிபட்ட விஷயம் என்றால், அது மனிதனை வெற்றியாளனாக்கி விடும். நம்பிக்கையில்லாமல், எதுவும் நடக்காது. மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தப்பெண்ணம் கொள்ளத் தொடங்கிவிட்டால் அவனால் ஒரு நொடிப் பொழுதை கூட உலகில் கழிக்க முடியாது. கூறினார்கள்: அநேகமாக இதில் விஷம் கலந்திருக்குமோ என்று சந்கேம் வந்துவிட்டால் தண்ணீர் கூட அவனால் அருந்த முடியாது. கடை வீதிகளில் கிடைக்கும் உணவுகளில் (தன்னை) மாய்த்து விடக் கூடிய பொருள் ஏதும் கலந்திருக்கமோ என்ற சந்தேகம் கொண்டால் அந்த உணவைக் கூட அவனால் உண்ண முடியாமல் போய் விடக்கூடும். பின்னர், அவன் எப்படி உயிர் வாழ முடியும்? வாழ்க்கையை கழிப்பதே கடினமாகிவிடும். இது ஒரு சிறிய உதாரணம் ஆகும். இதேபோன்று, மனிதன் ஆன்மீக விவகாரங்களிலும் இதிலிருந்து பயன் பெற முடியும். கூறினார்கள்: தற்போது நீங்கள் சுயமே சிந்தித்து பாருங்கள். மேலும், நீங்கள் உங்களது உள்ளங்களில் தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். அதாவது **நீங்கள் எனது கரத்தில் பைஅத் செய்துள்ளீர்கள். மேலும் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாககவும், நீதி நெறி தீர்ப்பவராகவும் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியென்றால், இவ்வாறு ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு, எனது ஒரு தீர்ப்பினாலோ அல்லது செயலினாலோ உள்ளத்தில் துன்பமும், வேதனையும் ஏற்படுகிறதென்றால் பின்னர் உங்கள் ஈமானைக் குறித்து கவலை கொள்ளுங்கள்.**

ஐயங்களும், சந்தேகங்களும் நிறைந்துள்ள ஈமான் எந்த நல்விளைவையும் ஏற்படுத்தாது. ஆயினும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உண்மையிலேயே நீதிநெறி தீர்ப்பவர் ஆவார் என்று உண்மையான உள்ளத்துடன் நீங்கள்

நம்பிக்கை கொண்டுவிட்டீர்கள் என்றால், பின்னர் அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன்னால் உங்களது ஆயுதங்களை கீழே போட்டுவிடுங்கள். மேலும், அவரது தீர்ப்புகளை கண்ணியத்துடன் பாருங்கள். அப்போதுதான் நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய விஷயங்களை கண்ணியப்படுத்தக் கூடியவர்களாகவும், மேன்மைபடுத்தக் கூடியவர்களாகவும் திகழ முடியும்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சாட்சியம் போதுமானதாகும். அவர் உங்களது இமாமாக இருப்பார் என்று அன்னார் (ஸல்) ஆறுதல் அளிக்கின்றார்கள். அதாவது, வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உங்களிலிருந்தே உங்களின் இமாமாக இருப்பார். அவர் நீதிநெறி தீர்ப்பவராக இருப்பார். இதில் உங்களுக்கு திருப்தி ஏற்படவில்லையென்றால், பின்னர் உங்களுக்கு எப்போது திருப்தி ஏற்படும்? ஈமானும் கொண்டுவிட்டு உள்ளத்தின் ஓரங்களில் தப்பெண்ணங்களும் இருக்கும் வழிமுறை ஒருபோதும் நல்ல மற்றும் அருளுக்குரிய வழிமுறையாக இருக்க முடியாது. நாங்கள் ஈமான் கொண்டுவிட்டோம் என்று வெளிப்படுத்திவிட்டு பின்னர் சில விவகாரங்களில் தப்பெண்ணங்களும் உருவாகிக் கொண்டிருக்கின்றதென்றால் அது நல்லதல்ல. கூறினார்கள்: எந்த மக்கள் என்னை நிராகரித்துள்ளார்களோ மேலும், என் மீது எவர்கள் ஆட்சேபனை செய்கின்றார்களோ அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மேலும், எவர் என்னை ஒப்புக் கொண்டுவிட்டு பின்னர் என் மீது ஆட்சேபனை கொள்கின்றாரோ அவர் அதிகம் நற்பேறு இழந்தவர் ஆவார். ஏனெனில் அவர் பார்த்த பிறகும் குருடராக இருக்கின்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 73-74, பதிப்பு 1984)

எனவே, இந்த ஈமானின் தரம் நம் அனைவரிடமும் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே தமக்கு பிறகு, கிலாஃபத் நிலைபெற்றிருப்பதற்கான செய்தி வழங்கியுள்ளார்கள். (அல் வஸிய்யத் நூல், ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 306) மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மட்டும் அல்ல. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையுடன் கிலாஃபத் கியாமத் வரை நிலைபெற்றிருப்பதற்கான செய்தியை வழங்கியுள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 6, பக்கம் 285, ஹதீஸ் எண்:18596, ஆலமுல் குதுப், பெய்ரூத்-1998)

மேலும், அஹ்மதிய்யா கிலாஃபத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிமுறையையே தொடரக்கூடிய அமைப்பு ஆகும். அந்த நீதி, நெறி தீர்ப்பவரின் தீர்ப்புகளை தொடரச் செய்யக்கூடிய அமைப்பாகும். தமது உடன்படிக்கையில் ஒவ்வொரு அஹ்மதியும் கிலாஃபத்துடனும் தொடர்புடையவராக இருப்பதற்கும் கட்டுப்படுவதற்கும் உடன்படிக்கை செய்கின்றார். எனவே, இந்த அடிப்படையில் கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் கட்டுப்படுதல் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் எல்லா அஹ்மதிகளின் கடமையாகும். இல்லையென்றால், பைஅத் என்பது முழுமையானதாக இருக்காது. எனவே இந்த அடிப்படையிலும் தமது ஈமானையும், உறுதியையும் அதிகரிப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

அடுத்து, திருக்குர்ஆனை ஆழ்ந்து படிப்பதன் பக்கமும், அதனை புரிந்து கொள்வதன் பக்கமும் ஜமாஅத்திற்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் உங்களுக்கு மீண்டும், மீண்டும் இந்த விவகாரத்தின் பக்கம் என்னுடன் தொடர்பு வைத்துள்ள மக்களாகிய உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன். அதாவது, இறைவன் இந்த அமைப்பை உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக நிறுவியுள்ளான். ஏனெனில், அதுவன்றி, நடைமுறை வாழ்க்கையில் ஒளியும், பிராகசமும் உருவாக முடியாது.

கூறினார்கள்:

நான் விரும்புகின்றேன். செயல் ரீதியிலான உண்மையின் மூலமாக இஸ்லாத்தின் சிறப்புகள் உலகத்திற்கு வெளிப்பட வேண்டும். இந்த பணிக்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். எனவே திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆயினும், அதனை வெறும் கதைகளாக எண்ணி ஓதாமல் ஒரு தத்துவமாக புரிந்து ஓதுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 155, பதிப்பு 1984)

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த உலகியல் மும்முரங்களில் மூழ்கி நமது பைஅத்தின் நோக்கத்தை நாம் மறந்து விடக் கூடாது!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் ஞானங்களையும், கட்டளைகளையும் புரிய வைப்பதற்கும் அதன்படி செயல்பட வைப்பதற்கும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான். மேலும், எனது ஜமாஅத்தின் பைஅத்தில் இணைகின்றவர்கள் அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுங்கள். அதன் பொருளையும், தஃப்ஸீரையும் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மீக கருவூலத்தையும் நாம் புரிவதற்கும்,படிப்பதற்கும் முயற்சி செய்யாத வரையிலும், அன்னார் வழங்கியுள்ள நூல்களை நாம் புரிவதற்கும், படிப்பதற்கும் முயற்சி செய்யாத வரையிலும் இது நடைபெற முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் ஒன்றும் கட்டுக்கதைகள் அல்ல. மாறாக, வாழ்க்கை நெறிமுறை ஆகும்.

அது ஒரு செயல் திட்டம் ஆகும். அதன்படி செயல்படுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீது கடமையாகும்.

நாம் இங்கு இடம்பெயர்ந்து வந்த பிறகு,இந்த நாடுகளில் வந்த பிறகு இந்த நோக்கத்தை மறந்துவிட்டால், மேலும் உலகியல் மும்முரங்களில் மூழ்கிவிட்டால், தமது குடும்பத்தின் சூழலை திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப ஆக்குவதற்கு முயற்சி செய்யவில்லையென்றால் பின்னர் நமது பிள்ளைகளும், சந்ததிகளும் மார்க்கத்திலிருந்து விலகிக் கொண்டே சென்றுவிடுவர். மேலும், இந்த விஷயம் நன்றி செலுத்துவதற்கு பகரமாக அல்லாஹ்வின் அருட்களை மறுக்கக் கூடிய விஷயமாக அமைந்து விடும். எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் அவர் பழைய அஹ்மதியாக இருந்தாலும், புதிய அஹ்மதியாக இருந்தாலும், இங்கு பிறந்த அஹ்மதியாக இருந்தாலும் அல்லது வெளியிலிருந்து இங்கு ஹிஜ்ரத் செய்து வந்த அஹ்மதியாக இருந்தாலும் அவர் மிகவும் சிந்திப்பதற்கு அவசியம் உள்ளது. அதாவது, அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் அவனது இறை வணக்கத்திற்கான உரிமையை வழங்குவதும் அவனது வேதத்தை ஓதுவதும், புரிவதும் அதன்படி செயல்படுவதும் நமது அடிப்படையான நோக்கமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் பைஅத்திற்குரிய உரிமையை செலுத்த முடியும்.

எவர்கள் ஹிஜ்ரத் செய்து வந்துள்ளார்களோ அவர்கள் இங்கு வந்த பிறகு உலகத்தின் எதிர்ப்பிலிருந்து தப்பித்து விட்டனர். ஆனால், அவர்கள் மார்க்கத்தின் படி வழி நடப்பவர்களாகவும், திருக்குர்ஆனை புரியக் கூடியவர்களாகவும் இல்லையென்றால் பின்னர் அவர்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுதாரர்களாக முடியாது. அதேபோன்று, புதிதாக வரக்கூடிய அஹ்மதிகளாக இருக்கட்டும் அல்லது இங்கு வசித்து வருகின்ற பழைய அஹ்மதிகளாக இருக்கட்டும். அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, வெறும் பைஅத் செய்வதால் மட்டும் நோக்கம் நிறைவேறி விடாது. மாறாக நாம் நம்மை இஸ்லாமிய போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்ளும்போதுதான் நோக்கம் நிறைவேறும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உண்மையை கூறுகின்றேன். இது ஒரு நிகழ்ச்சியாகும். இதனை அல்லாஹ் நற்பேறு பெற்றவர்களாக உருவாக்கியுள்ளான். இதிலிருந்து பயன் பெறுபவர்களே அருளுக்குரியவர்கள். நாம் எதனை பெற வேண்டுமோ அதனை பெற்றுவிட்டோம் என்று என்னுடன் தொடர்பு வைத்துள்ள நீங்கள் ஒருபோதும் பெருமை கொண்டு விடாதீர்கள். தமது கடும் எதிர்ப்பு மற்றும் அவமரியாதையின் மூலமாக இறைவனின்

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 10 November 2022 Issue No. 45

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கடுமையான கோபத்திற்கு ஆளாகியுள்ள அந்த நிராகரிப்பாளர்களைக் காட்டிலும் நீங்கள் நற்பேறுக்கு மிக அருகில் வந்துவிட்டீர்கள் என்பது உண்மை ஆகும். நீங்கள் நல்லெண்ணம் கொண்டு இறைவனின் கோபத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள கவலை அடைந்தீர்கள் என்பதும் உண்மை ஆகும். ஆனால், உண்மையான விஷயம் இதுவே ஆகும். அதாவது, தற்போது இறைவன் நிரந்த வாழ்விற்காக உருவாக்கியுள்ள நீருற்றிற்கு அருகில் நீங்கள் வந்தடைந்துவிட்டீர்கள். ஆயினும், நீங்கள் (அந்த) தண்ணீரை பருக வேண்டியது இன்னும் மீதமிருக்கின்றது.

இறைவன் உங்களது தாகத்தை தணிக்க வேண்டும் என்று அல்லாஹ்வின் அருளைக் கொண்டும், கருணையைக் கொண்டும் அவனிடம் நற்பேறு வேண்டுங்கள். ஏனெனில் இறைவனின்றி எதுவும் நடக்க முடியாது. இறைவனின் அருள் இல்லையென்றால், எதுவும் நடக்க முடியாது. எனவே எப்போதும் அல்லாஹ்வின் அருளை வேண்டுங்கள். கூறினார்கள்: நான் இதனை நிச்சயமாக அறிகின்றேன். எவர் இந்த நீருற்றிலிருந்து (தண்ணீர்) அருந்துவாரோ அவர் ஒருபோதும் மாண்டு போக மாட்டார். ஏனெனில், இது வாழ்வளிக்கும் தண்ணீர் ஆகும். மேலும், அழிவிலிருந்தும் பாதுகாக்கின்றது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

இந்த நீருற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்கு என்ன வழி? அது இதுவே ஆகும். அதாவது, அல்லாஹ் நிலைநாட்டியுள்ள உரிமைகளை வழங்க வேண்டும். அதனை முழுமையான முறையில் செலுத்த வேண்டும். அவற்றில் ஒன்று, இறைவனுக்குரிய உரிமை மற்றொன்று படைப்பினங்களுக்குரியது.

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்ற ஷஹாதத்தின் மூலமாக நீங்கள் ஒப்புக் கொண்டிருப்பதை போன்று உங்களது இறைவனை ஏகனாகவும், அவனுக்கு (எந்த)இணையுமில்லை என்றும் கருதுங்கள். அதாவது, அல்லாஹ்வைத் தவிர எந்த நேசத்திற்குரியவரும், நோக்கமும் இல்லை என்பது அந்த கலிமா ஆகும். இது எப்படிபட்ட அன்பிற்குரிய வாக்கியம் என்றால், இது யூதர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் அல்லது மற்ற இணைவைப்பாளர்களுக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால் மேலும் அவர்கள் அதனை புரிந்து கொண்டிருந்தால் அவர்கள் ஒருபோதும், ஒருபோதும் அழிந்து நாசமாகியிருக்க மாட்டார்கள். இந்த ஒரு கலிமா இல்லாமல் போன காரணத்தினாலேயே அவர்கள் மீது அழிவும், துன்பமும் இறங்கியது. அவர்களின் ஆன்மா பயனற்றதாக மாறி அழிந்து போனது. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 184-185, பதிப்பு 1984)

எனவே பாருங்கள்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எவ்வாறு ஆறுதல் நல்கியுள்ளார்கள்! மேலும், உத்திரவாதம் நல்கியுள்ளார்கள்! நீங்கள் பைஅத் செய்து, மேலும் விஷயங்களை ஒப்புக் கொண்டு அந்த நீரூற்றிற்கு அருகில் வந்தடைந்துவிட்டீர்கள். நீங்கள் அதிலிருந்து தண்ணீர் அருந்தினால், பயன் பெற்றீர்கள் என்றால், வெறும் பேச்சளவில் மட்டும் அல்லாமல் அமலும் செய்தீர்கள் என்றால் பின்னர் உங்களுக்கு இந்த உத்திரவாதம் வழங்கப்படுகிறது. அதாவது (அந்நிலையில்) ஒருபோதும் உங்களுக்கு ஆன்மீக அழிவு ஏற்படாது. ஏனெனில், திருக்குர்ஆனின் தூதுச் செய்தியையும், அல்லாஹ்வின் கட்டளைகளையும் நிலைபெறச் செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் வருகை தந்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்: பைஅத் செய்வது மட்டும் போதுமானது என்று கருதாதீர்கள். மாறாக, அல்லாஹ் அமல்களையும் விரும்புகின்றான். எவர் அமல் செய்வாரோ அவர் அல்லாஹ்வின் அருட்களிலிருந்து வெறுமையாக இருக்க மாட்டார். அவர் ஒருபோதும் அழிந்துபோக மாட்டார்

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்ற கலிமா உங்களுடைய உட்புறம் மற்றும் வெளிப்புறத்தின் குரலாக மாறிவிடும்போதுதான் இந்த செயல் நிலை உருவாகும். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் உங்களின் நேசத்திற்குரியவராக இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்தியை தவிர வேறு எந்த பொருளின் தேடலாக இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடவுங்கள்.

**தற்போது ஒவ்வொருவரும் இந்த விஷயத்திலிருந்து தம்மை ஆய்வு செய்து கொள்ள முடியும். அதாவது, நாம் கலிமாவை ஓதுகின்றபோது உண்மையிலேயே எல்லா விஷயங்களை விடவும் அதிகமாக அல்லாஹ் நமது நேசத்திற்குரியவனாக இருக்கின்றானா? அவனது திருப்தியை பெறுவது நமது நோக்கமாக உள்ளதா? நாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாக கீழ்படிந்து வருகின்றோமா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.**

**தொழுகைக்கான நேரங்களில் தொழுவதன் பக்கம் நமக்கு உடனடியாக கவனம் ஏற்படவில்லையென்றால், நாம் உலகியல் பணிகளை விட்டுவிட்டு அல்லாஹ்வின் குரலுக்கு உடனடியாக செவி சாய்த்தவாறு தொழுகைக்காக ஆஜராகவில்லையென்றால், அந்நிலையில் நாம் வெறும் வாயளவில் கலிமா கூறுபவர்களாக இருக்கின்றோம்.** மேலும், ஒரு மறைவான ஷிர்க் உள்ளது என்று பொருள். நமது உலகியல் வியாபாரங்கள் அல்லாஹ்விற்கு எதிரில் நிற்கின்றன என்று பொருள். ஒரு நம்பிக்கையாளர் இந்த நம்பிக்கையில் நிலைபெற்றிருக்கின்றார். நிலை பெற்றிருக்க வேண்டும். அதாவது, எனது வியாபாரங்களிலும், எனது பணிகளிலும் அல்லாஹ்வின் அருளின் மூலமே பரக்கத் ஏற்படுகின்றது. மேலும் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நிலையிருந்தால், பின்னர் தனது உலகப் பணிகள் அல்லாஹ்வின் குரலுக்கு எதிராக வந்து நின்றுவிடும் என்பது எவ்வாறு சாத்தியம்? ஒருவேளை அவ்வாறு வந்து நின்றால், பின்னர் நாம் கலிமாவின் ஆன்மாவையே புரியவில்லை (என்று பொருள்). நாம் வாயினால் கலிமா கூறுகின்றோம். ஆனால் செயல் நமது கூற்றுகளுக்கு பொருத்தமானதாக இல்லை. நாம் நீரூற்றிற்கு அருகில் வந்துவிட்டோம். ஆனால், தண்ணீர் அருந்துவதற்காக கைகளை நீட்டவில்லை (என்று பொருள்).

எனவே, ஒருவேளை இவ்வாறான நிலைமை இருந்தால் பின்னர், பைஅத்திற்குரிய உரிமை வழங்கப்படவில்லை என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்.

தொடர்ச்சி : அடுத்த இதழில்...

தமிழாக்கம் : மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**National Watch Company**
**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad

* * * * *